# இளங்கலைத்தமிழ் (B. A. Tamil)

## தொலைநோக்கு(Vision)

தற்காலத்திலிருந்து தொடஙகி தமிழின் கடந்த கால (Contemporary to Ancient) இலக்கிய அழகியலை அறிந்து கொள்வதுடன், தமிழ்ச்சமுதாயத்தின் கலை இலக்கிய, சமுதாய அரசியல் வரலாற்றுப் பின்னணியைக் கல்வெட்டுகள் முதலான துணைச்சான்றுகள், புதிய அகழாய்வுத்தரவுகள் போன்றவற்றைக் கொண்டு மீளாய்வு செய்யும் முறைமைகளையும் உருவாக்குதல். அதே போன்று, சிந்தனையை முன்னோக்கி (Contemporary to Prospect) நடத்தி, நவீனத் தொழில்நுட்பப் பெருங்காலத்திற்கு ஏற்றவாறு தமிழை எண்மப்படுத்துதல் (Digitalization to Tamil)

## செயல்நோக்கு (Mission)

- உலகச்செம்மொழிகளில் உன்னதமான இடத்தைப்பெற்றுள்ள தமிழின் அவ்வக்காலக் கலை இலக்கிய, சமுதாய அரசியல் செயற்பாடுகளின் பின்னணியில் உற்றுநோக்கி, அவை ஒவ்வொன்றின் வரலாற்று வளர்ச்சி நிலைகளை ஆராய்ந்து மதிப்பிடுதல்.

## பட்டப் பயனெதிர்வு (Programme Outcomes)

1. குறிப்பிட்ட காலத்திய கலை இலக்கியப் போக்குகள் கட்டமைக்கும் தனிமனித சமூகவாழ்வியலை உற்றுநோக்குதல்.
2. குறிப்பிட்ட காலத்திய மொழியாளுமைகளின் வழியாகத் தத்தமது தனித்தன்மையுடன் கூடிய மொழி ஆளுமையை உற்றுணர்தல்.
3. மொழி வளர்ச்சி நோக்கில் கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் திறன் பெறுதல்.
4. குறிப்பிட்ட காலத்திய கலை இலக்கியப் போக்குகளை வரலாற்றுநோக்குடன் மதிப்பிடும் திறன் பெறுதல்.
5. குறிப்பிட்ட காலத்திய கலை இலக்கியங்களைத் திறனாய்ந்து முடிவுகளை வெளிக்கொணரும் திறன் பெறுதல்.
6. ஒவ்வொரு காலத்திய சிறப்புகளையும் அடையாளங்கண்டு, ஆவணப்படுத்தும் மனப்பாங்கினை எய்துதல்.
7. தொடர்ச்சியான கற்றலின் வழி எதிர்காலத்திய இலக்கிய சமூக ஆய்வுக்களங்களை இனங்காணும் மனநிலையைப் பெறுதல்.
8. சார்ந்துள்ள சமூகம், பணிச்சூழலில் தலைமைப்பண்பைப் பெறுவதற்கான நெறிமுறைகளை உள்வாங்குதல்.
9. சமூகஅவலம், பண்பாட்டுச் சிதைவுகள் ஆகியவற்றுக்குத் தீர்வுகாண அறவியல் பாங்குடன் போராடும் துணிவு பெறுதல்.

## இளங்கலைப் பட்டப் பயனெதிர்வு (Programme Specific Outcomes)

1. இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்களைச் சமூகத்திற்குப் பயன்படும் வகையில் கட்டமைக்கும் திறனை மாணவர்கள் எய்துதல்.
2. தமிழின் நிலைத்த இலக்கிய மரபுகளை அவ்வக்காலத்திய இலக்கியப்போக்குகளுடன் ஒப்பிட்டு வரலாற்றுமுறைத் திறனாயும் பாங்கினை எய்துதல்.
3. கணினியல், தொல்லியல், சுற்றுலாவியல், பதிப்பியல், ஊடகத்துறைகளில் பணிவாய்ப்புத் திறன்களைப் பெறுதல்.
4. மரபிலக்கணம், அவ்வக்காலத்தியஇலக்கியங்கள், கணினித் தொழில்நுட்பம் வாயிலாகப் படைப்பூக்க இயல்புகளைப் பெற்றுத் தனித்திறன் எய்துதல்.

## முதுகலைத்தமிழ் (M. A. Tamil)

### தொலைநோக்கு(Vision)

தற்காலத்திலிருந்து தொடங்கி தமிழின் கடந்த கால (Contemporary to Ancient) இலக்கிய அழகியலை அறிந்து கொள்வதுடன், தமிழ்ச்சமுதாயத்தின் கலை இலக்கிய, சமுதாய அரசியல் வரலாற்றுப் பின்னணியைக் கல்வெட்டுகள் முதலான துணைச்சான்றுகள், புதிய அகழாய்வுத்தரவுகள் போன்றவற்றைக் கொண்டு மீளாய்வு செய்யும் முறைமைகளையும் உருவாக்குதல். அதே போன்று, சிந்தனையை முன்னோக்கி (Contemporary to Prospect) நடத்தி, நவீனத் தொழில்நுட்பப் பெருங்காலத்திற்கு ஏற்றவாறு தமிழை எண்மப்படுத்துதல் (Digitalization to Tamil)

### செயல்நோக்கு (Mission)

- உலகச்செம்மொழிகளில் உன்னதமான இடத்தைப்பெற்றுள்ள தமிழின் அவ்வக்காலக் கலை இலக்கிய, சமுதாய அரசியல் செயற்பாடுகளின் பின்னணியில் உற்றுநோக்கி, அவை ஒவ்வொன்றின் வரலாற்று வளர்ச்சி நிலைகளை ஆராய்ந்து மதிப்பிடுதல்.

## பட்டப்பயனெதிர்வுProgramme Outcomes

1. சமுக நல வாழ்விற்கான அடிப்படையை நல்கும் அறிவுத்துறைகளில் கலை இலக்கியத்துறைகளின் தேவைகளை இணைத்துப் பார்க்கும் அறிவாற்றல் உடையவராவர். (Knowledge)
2. காலந்தோறும் மாறிவரும் சமுக விழுமியங்கள் குறித்த பகுப்பாய்வுப் பார்வையினை அளிக்கும் இலக்கிய வரலாற்று அறிவினைப் பெறுவர். (Knowledge)
3. செவ்வியல் இலக்கண மரபைப்பயிலும் வழி சமகாலப்பயன்பாட்டிற்குரிய மொழியின் எழுத்து சொல் பொருள் இலக்கண அமைப்பைப் பிழையறப் பயன்படுத்தும் அறிவுடையவராவர். (Knowledge)
4. தமிழ் இலக்கியக்களத்தில் விளைந்துள்ள பல்வேறுவழக்கு செய்யுள் உரைநடை இலக்கிய வகைகளையும் வடிவங்களையும் விளங்கிக் கொள்ளும் பகுப்பாய்வுத் திறனுடையவராவர். (Skill)
5. பழந்தமிழ் இலக்கிய இலக்கணமரபின் தொடர்ச்சியான மாற்றங்களைப் பல்வேறு வரலாற்றுக் காலங்களோடு தொடர்புப்படுத்திப் புதியவற்றைக் கண்டறியும் ஒப்பீட்டுத் திறன் வாய்க்கப் பெறுவர். (Skill)
6. இலக்கியத்தோடு தொடர்புடைய நாட்டுப்புறவியல் மொழியியல் மொழிபெயர்ப்பியல் மக்கள்தொடர்பியல் போன்ற துறைகளின் தாக்கங்களை விளங்கிக்கொள்ளும் அறிவாராய்ச்சித் திறன் பெற்றிருப்பர். (Skill)
7. அன்றாட வாழ்விற்குத் தேவையான மொழிப்பண்பாட்டு செயல்பாடுகளை செவ்வியல் மரபிலிருந்தும் சமகால இலக்கியங்களிலிருந்தும் உருவாக்கிக் கொள்ளும் நுண்ணுணர்வுடன் இலங்குவர். (Attitude)
8. சமுகஇயக்கங்கள்வழிபடைக்கப்பட்டஇலக்கியம்இஇலக்கணம்இகோட்பாடுகளைக்கற்றதினால்தங்களைகாலத்தேவைக்கேற்றபடைப்பாளர்களாகவெளிப்படுத்திக்கொள்வர். (Attitude)
9. மொழி – பண்பாட்டின் வழி அவை வழங்கும் நிலத்தோடு தொடர்புடைய வாழ்க்கையைப் பராமரித்து அதனை எதிர்காலத் தலைமுறைக்கு உரியதாக்கும் பொறுப்புணர்வை வரித்துக் கொள்வர். (Social Values)

## முதுகலை பட்டப்பயனெதிர்வு Programme Specific Outcomes

1. தமிழ் இலக்கிய, இலக்கணங்களின் விரிவான தொகுப்பின் வழி, தாங்கள் சார்ந்துள்ள நிலம் – பண்பாடு தொடர்பான வாழ்க்கை முறைகளில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள சமுக மாற்றங்களை இலக்கிய வரலாற்றின் மூலம் விளங்கிக் கொள்ளும் அறிவைப் பெறுவர். (Knowledge)
2. சமகால வாழ்வியலுக்குத் தேவையான சூழலியல் சார்ந்த அற விழுமியங்களையும் இருத்தலுக்கான அவசியத்தையும் உருவாக்கிக் கொள்வர். (Skill)
3. ஒப்பீட்டு நோக்கில் அயலக, தேசியம் சார்ந்த செவ்வியல் – நவீன மொழி, கலை, இலக்கியங்களை அறிமுகமாக்கிக் கொள்வதால் காலவெளியை ஊடுருவிப்பயணிக்கும் ஓர் உலகளாவிய தன்மையைப் பெறுகிறார்கள். (Attitude)
4. சமூகப் பண்பாட்டு சூழலியல் சார்ந்த நெருக்கடி நேரும்போது உரிய எதிர் வினையாற்றும் தகவமைப்பைப் பெறுவர். (Values)